செ.வெ.எண்:11/2016 நாள்:14.10.2016

**<u>சிவகங்கை மாவட்டத்தில் பள்ளி கல்வித்துறை சார்பில்</u>**

**<u>பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாள் இளைஞர்களின் எழுச்சி நாளாகக் கொண்டாடப்பட்டது.</u>**

சிவகங்கை மாவட்டத்தில் பள்ளி கல்வித்துறை சார்பில் பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாள் இளைஞர்களின் எழுச்சி நாளையொட்டி அரண்மனைவாசலில் மாணவ, மாணவியர்களின் பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப்பேரணியின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது, டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்கள் மாணவர்கள் நாட்டின் எதிர்காலம் என்றார். அவர் கூறியபடி உயர்வான இலட்சியத்தை கனவு கண்டு அதை நினைவாக்க முயற்சிக்க வேண்டும். நீங்கள் வாய்ப்பிற்காக காத்திருக்கக்கூடாது. வாய்ப்பை நீங்களே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். உறங்கும் போது வருவதில்லை கனவு. உறங்காமல் செய்வதே கனவு. மாணவர்கள் நினைத்தால் நம் நாட்டை வல்லரசு நாடாக ஆக்கமுடியும் என்று அவர் கூறிய கூற்றை மாணவர்கள் நினைவில் வைத்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இப்பேரணியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.செந்திவேல்முருகன், சிவகங்கை வட்டாட்சியர் திரு.நாகநாதன், பள்ளிக் கல்வித்துறை அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.